238

பதிவு எண் — வெள்ளிக் கிழமையில் திருகுலக் கிளர்ச்சித் தாள்

# முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு | திருதலம், மாம்பாக்கம் ; விகிருதி, மார்கழி ; 29—12—50. | தளிர் கக

OFFICE OF THE REGISTRAR 16 JAN 1951 MADRAS

## தணிகைக் குமரன்



"தணிகை மலையைச் சாரேனே, சாமி அழகைப் பாரேனே"

ஆண்டுக் கையொப்பம் ரு. 2. தனித் தாள்—அரையணா


# - தணிகை மலை -

[ தணிகை மணி ]

கழுநீர் நீலோற்பலம் என்றும் மலர்கின்ற சுனையின் சிறப்பையுடையது. பல திசையிலுள்ளாரும் நாடி நெருங்கி வரும் சரவணப் பொய்கை என்னும் திருக்குளத்தை யுடையது.

தமிழ் வழங்கும் வட எல்லையாக விளங்குவது. திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் பதி.

மாதர்களும் வியக்கத்தக்க உண்மைப் பெருந்தவசினர் வாழும் பதி. மறை முழங்கு மாநகர்.



"புவிக்குயிராகும் திருத்தணி"

முருகவேள் என்றும் அகலாது வீற்றிருக்கும் அருமைப் பதி. பெருமான் கலியாண கோலமாய் அமரும் இடம்.

தணிகை நாயகர், தமிழ்ப் பாவினால் எத்தும் அடியார்களுக்கு எளியர். வைத்திய நாதப் பெருமான்.

அறிவை அறியும் தத்துவத்தையும் அபரிமித வித்தைகளையும் அருணகிரியார்க்கு ஆறுமுகப்பரமன் அருளிய தலங்கள் ஐந்தினில் ஒன்று திருத்தணிகை.

* *

ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு "திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணி" என்றதன் உண்மையை இப்போது திருத்தணிகையில் வருடந்தோறுங் காண்கின்றோம்.

என் தமையனார் வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் 1912 முதல் 'ஜனவரி' முதல் தேதிதோறும் தணிகை நாயகரைத் தரிசித்து வந்த வழக்கத்தை அவர்கள் மூலமாய் வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் 1917 'டிசம்பர்' 31உ முதல் ஆர்வத்துடன் மேற்கொண்டு 1921 முதல் வருடந்தோறும் தம அடியார்களுடன் 'டிசம்பர்' 31 தேதியில் வந்து திருப்புகழ் பாடி அவ் வழக்கத்தை விருத்தி செய்தார்.

(அருணகிரி நாதர்), திருமுருகன் பூண்டியைத் தரிசித்து ஆண்டுக்கு ஒரு நாளேனும் தப ஜெபத்தை நான் மனக்கனிவுடன் தீண்டவும், உன் திருவடியைப் போற்றவும் அருளுதியெனத் துதித்தனர். இங்ஙனம் ஆண்டுக்கு ஒரு முறையேனும் ஆண்டவனைத் தரிசித்துப் பாடித் துதிக்கும் அநுட்டானம் இப்போது திருத்தணிகைக்கு அன்பர்கள் ஆண்டுக்கு ஒரு முறை 'ஜனவரி' முதல் நாள் தரிசனத்தின் பொருட்டு 'டிசம்பர்' இறுதி நாள் இரவு வந்து கூடி முருகன் திருப்புகழைப் பாடித் துதிப்பதற்குப் பொருந்தியிருக்கின்றது.

இவ் வழக்கம் வருடம் செல்லச் செல்ல இப்பொழுது பெரிய உற்சவம் போலப் பல தலத்து அன்பர்தம் பெருந்திரட் கூட்டமுடன் நடைபெறுகின்றது. 'டிசம்பர்' 31உ இரவு தணிகையில் ஒன்று கூடி நடைபெறும் திருப்புகழ்ப் பஜனைக் காட்சி,

"சிவலோகம் எனப் பரிவேறு" திருத்தணிகையை உண்மையாகவே சிவலோகம் எனப் பொலியச் செய்கின்றது.

* *

அடியரல்லாதார்க்குத் தழலாகவும் உண்மை அடியார்க்கு நிழலாகவும் திருப்புகழ் உதவும்.

முருகன் அடியார்கள் திருப்புகழ்ப் பாராயணத்தின் பொழுது வள்ளியம்மைபோல அசைவற்ற உண்மைப் பத்தியைச் செலுத்தி ஒழுக்கந் தவறாது துதிக்கவேண்டும். அங்ஙனம் திருப்புகழ்ப் பாராயண நியமங் கொண்டவர்களுக்கு அருள் கூடும், பகை ஒழியும், சகலசித்தியுங்கைகூடும்.

# தணிகைத் தத்துவம்


[ திருப்புகழ் மணி ]

பெரும் பாவனையே தணிகை மலையின் தத்துவம்.

அடியார் மனத்தைத் தேடி நாடும் பிரசண்ட மாருதமாகிய அருள் சத்தியுடன் தணிகேசன் வெற்றி கொண்ட ப்ரபு! 'ஹௌண்ட் ஆப் ஹெவன்' (Hound of Heaven) என்றார் ஓர் ஆங்கில பத்தர் கவியரசு (Francis Thompson).

ஒரு தணிகேசனைத் தரிசிக்கச் செல்லும் பத்தர்கள், தணிகையில் ஊரெல்லாம் தணிகேசனாய் உணர்வார்கள்.

வாழ்த்தும் நல்ல உள்ளம் தேக்கிய செங்கழுநீர்ச்சுனை; செவ்வழிப் பண்ணில் திருப்புகழ்ப் பாக்கள் பாடும் வண்டுகள் நிறைந்த சோலை; அன்பும் ஆர்வமும் வெள்ளமெடுத்து அடியார் கண்களில் வற்றாது ஓடும் குளிர்ந்த அருவிகள்; கொழித்தோடும் பேரின்ப ஓட்டம்; தபோதனர்கள் உறைவிடம்; சிவபோகத்தின் உரு. பூரணம் நிறைந்த மாபெரும் மலை; சாரலில் திருப்புகழ் அடிகள்; வெந்த மனமும் தளர்ந்த உணர்வும் தண்மை பெற்றுத் தணிகையுடன் வாழப்பெறும் சூழ்நிலை; பேதம் நீங்கிச் சேய் உறையும் திருத்தணிகை! காண்பார்க்கு விண்ணுலகம், காணார்க்குக் கல்லுலகம்!



வேல்முருகன் வள்ளியை ஆட்கொண்டு, அடியார்கள் எவை எவை நினைத்தவை அவை அவை முடித்தருள் கிருபைக் கடலாக வீற்றிருக்கும் இடம் தணிகைமாமலை.

வேள்வியினாலும் கருமங்களினாலும் அன்றி, பத்தியினாலும் அன்பினாலும் அடைய நிற்கும் முருகன் தணிகையில் நிற்கின்றான்.

தணிகேசன், தன்னை வேண்டாத ஜீவனைக்கூட, தானே தொடர்ந்து ஆட்கொள்கின்றான். உள்ளத்தில் நினைந்து உருகி, வெளியில் எவ்வுருவத்தில் சென்றாலும் மறுதலித்த வள்ளியை விடாது தொடர்ந்து தொடர்ந்து ஆட்கொண்ட குகப் பெருமான்.

வெறியடங்கித் தண்மை பெற்று அன்பர் மனம் களிக்கப்பெறும் தலம் தணிகை. ஐம்புலன்கள் அடங்கிய இடம் தணிகை.

இச்சா சத்தி ஈசனை அடைந்தாலன்றி, அமரர் தண்மையை அடையாது. ஆதி முதல்வனை அடைந்த இச்சை தண்மை பெற்று அருளும்

'முல்லைக் கொடி'
நேயர்க்கு அன்பறிவிப்பு!

இதழ் தொடங்கியபின், கடிதம் விலை ஏறிவருகிறது. எளிய விலைக்குத் தர விரும்பும் ஆர்வம் மாட்டாமையாய் உள்ளது. அடுத்த இதழ் முதல் தனித்தான் விலை 0—1—0;

'முல்லைக் கொடியின் மொழியிலும் பண்பிலும் பழகிவரும் அன்பர், இதனை ஆதரவுடன் ஏற்பர்.

—ஆசிரியர்



திருப்புகழ் மணி

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

—புறநானூறு.


| கிளை | விகிருதி, மார்கழி | தளிர் |
|---|---|---|
| 3 | 29-12-50 வெள்ளி | 11 |


# தீர்த்த யாத்திரை

நாட்டில், காட்சிக் கினிய கருத்துக்கினிய சிறந்த இடங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

கவர்ச்சி மிக்க மலைப் பாங்குகள், கானகங் கள், நீர் நிலங்கள், கடற்கரைகள், அருவிகள், ஆறுகள், ஊற்றுகள், சோலைகள் ஆற்றுத் திட்டுகள் முதலிய இயற்கை நிலையங்கள் அங் கங்கும் உள்ளன.

திருக்கோவில்கள், குளங்கள், பல்வகை மண்டபங்கள், குகைக் கோவில்கள், சிற்பச் செதுக்குருவங்கள், உருவச் சிலைகள், கோபுரங் கள், விளை நிலங்கள், ஏரிகள், அணைக்கட்டுகள், படித்துறைகள், மாட மாளிகைகள், பூங்காக் கள் முதலிய செயற்கை நிலையங்களும் பற்பல உள்ளன.

உடம்புக்கு நலமும் மனத்துக்கு வளமும் அறிவுக்கு மகிழ்வும் உணர்வுக்கு உண்மையும் தந்து வாழ்வை மேன்மையாக்கக் கூடியவை இவை. .

மலை, அருவி முதலிய இயற்கை நிலையங் களில் இப்படிப்பட்ட நலங்கள் இருப்பது தெரிந்தே, அவற்றைக் கோவில் குளங்களாகச் செயற்கைச் சிறப்புகளும் அமைய இயற்றி, மக்கள் அங்கே போகவும் தங்கி வாழவும் வாய்ப்பு களை உண்டாக்கியிருக்கிறார்கள் பெரியோர்கள். 'மூர்த்தி', 'தலம்', 'தீர்த்தம்' என்று அவை பெயர் பெற்றன.

இந்தியாவில், இமயத்தின் கொடுமுடியாகிய திருக்கயிலை முதல் தெற்கே குமரி முனை வரை யில் இப்படிப்பட்ட கவர்ச்சியான நிலையங்களை நம் முன்னோர் கண்டு அழகு செய்து, பல்லா யிரக் கணக்கான ஆண்டுகளாகப் புனித யாத் திரை செய்து அவற்றின் நலம் துய்த்து வருகிறார்கள்.

தென்னிந்தியாவில் இத்தகைய அழகு நிலை யங்கள் மிகுதியாக, இருக்கின்றன. அழகு திருத்தணிமலை என்று அருணகிரிநாதர் வாயார வாழ்த்திய 'திருத்தணிகை' என்பது அவற்றுள் ஒன்று. 'அழகிய பெருமா'ளாகிய முருகக் கடவுள் அங்கே திகழ்கின்றார்.

திருத்தணிகை செல்வார் எவரும் இவ்வுண்மையை இக் கிழமையிற் கண்டு மகிழலாம்; கேட்டு உணர்வு கூடலாம்.

# முருகன் திருவருள்

'நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென், நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்!' எனக்
குறித்தது மொழியா அளவையில், குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
'அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்'தென,
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
'அஞ்சல் ஓம்புமதி, அறிவல்நின் வர'வென
அன்புடை நன்மொழி அளைஇ, விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ யாகித் தோன்ற, விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி! —நக்கீரர் தமிழ்.

பன்னிரு விழியெனுங் கண்ணகன் சுனையில்
அருளெனும் அருவி விரிவுறப் பெருகி
முழவுத் தோளெனுங் கொழுவிய குன்றில்
பன்முகம் பரந்து தண்ணெனச் செல்ல,
நித்திலம் பெய்த விழுத்துவர்ச் செப்பின்
மூய்திறந் தன்ன வாய்நகை தோன்ற,
வரைவிலங்கி யோடும் மின்னே போல
அரம்பொரு வைவேல் உரங்கிடந் தொளிர
திருமான் முகத்தின் இருவிழி யென்ன
மஞ்ஞையிற் கிடந்த இருதாள் மலர,
அஞ்ஞையர் இருவரும் இருமருங் கிருப்ப,
அமைத்த கையும் அருடரு கையும்
இமைப்ப தில்லாத் தேவரும் பிறரும்
கண்டுகண் டுவப்பக் கவின்றுநனி விளங்கும்
காண்டகு கோலம் தழீஇ மாண்டக,என்
கண்ணெதிர் பொலிந்தநின் இன்னருள் நினைப்பின்,
வயாவுறு நோயும் பாரா தின்ற
புதல்வோற் கண்டு களிக்கும்
சிதைவில் தாயின் அருளினும் பெரிதே.

—மறைமலையடிகள் தமிழ்.

தங்கக்கத்தியின் பிடியில் சிற்பங்களை ஓயாது செதுக்கிக்கொண்டிருப்பவன் கத்தியின் பயனை அறிந்த பின், அதனை நிறுத்தி, உரமான சாணைக்கல்லினால் கூர்மையாகச் செய்து மேலும் தீட்டிக்கொள்வதுபோல, நாம், நம் வாழ்க்கையின் பயனை அறிந்த பின்னரே, வாழ்வை நெறிப்படுத்த இயலும். பயனை அறிய ஆராய்தல் வேண்டும்.

வாழ்வை நடத்துவதையே பெருஞ் சுமையாக்கிக் கொண்டு ஓய்வின்றித் தவிப்பதால் இன்றைய மன்பதைக்கு இதைப்பற்றி ஆராயும் நோக்கம் குறைந்துவிட்டது.

பல்லாயிரவர் பல நாட்கள் வருந்திச் செய்யும் ஒரு செயலைச் சுருங்கிய காலத்தில் மிக எளிதாகச் செய்யக் கூடிய கருவிகளை அறிவியலார் கண்டு பிடித்துதவினர். இதனால் இன்று வேலைநேரம் குறைந்து அமைதி மிகுந்திருக்கவேண்டும். ஆனல் வாழ்க்கையில் இதற்கு மாறான நிலைமையையே கண்டுவருகிறோம்.

கருவிகளைக் கண்டுபிடித்த அவ் வறிவியல் புலவர்களின் நுண்ணறிவினைக் கண்டு வியத்தற்குக்கூட நேரமில்லை. நாகரிகம் மிகுந்த நியூயார்க்கு நகரத்தில் வேலை மிகுதியால் அமைதி குன்றி மனந்தடுமாறி வெறிபிடிப்பதாகவும் தெரிகிறது. மன்பதைக்கு வாழ்க்கையை நடத்துவதே கடினமாகிவிட்டது.

தேவைகளை மிகுத்துக் கொண்டமையே இதற்கு ஏதுவென்று சான்றோர் காட்டுகின்றனர். நம் நாட்டில் பெரும்பாலோர் வறுமையால் வாட்டப்படுவதும், ஒரு சிலர் தம் தேவைகளை வளர்ப்பதேயாகும்.

எனவே தேவைகளைச் சுருக்கிக் கொண்டு, வாழ்வை எளிதாக்கி, அதன் பயனை ஆராய்ந்து தெளிந்து, பயனுள்ள வாழ்க்கையை நடத்துதல் நன்று.

* *

அடுத்த ஆண்டின் இறுதியில் பொதுத்தேர்தல் நம் நாட்டில் நடக்கப்போகிறது. ஆட்சி என்பது ஒன்றுண்டு, அதற்கும் நமக்கும் தொடர்புண்டு என்பதை அறியாதவர்களும்,

# நாட்டுக்கு நல்லது

[ மெய்கண்டான் ]

யார் ஆண்டால் நமக்கென்ன என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களும் பலர். அத்தகையோர், அடுத்த ஆட்சியினரை எவ்வாறு தேர்ந்தெடுக்கப் போகின்றனரோ தெரியவில்லை.

ஆட்சியாளர் ஆறுமாதத் திட்டமொன்றை இயற்றி அனைவர்க்கும் அரசியலறிவை ஊட்டுவது இன்றியமையாதது.

பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலாளர்களுக்கும் பயிற்சி கொடுத்து அவர் தொண்டினையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

* *

முன்பெல்லாம் கறுப்பு வந்த காலங்களில், மக்கள், பாதைகள் போட்டும் நீர்ப்பாசன வசதிகள் செய்தும், கூலி பெற்றுப் பிழைத்துவிடுவர். இந்தக் கறுப்புக்காலத்தில் இதுவரை வேலை செய்துகொண்டிருந்தவர்களுக்கும் வேலை இல்லாமற் போகிறது. எடுத்துக் காட்டாக :

3000 நெசவாளப் பட்டினிப் பட்டாளம் 'செய்ய நூலில்லை' என்று மசூலிப்பட்டண மாவட்டத் தலைவரைக் கண்டது.

10,000 நெசவாளர் உண்ணா நோன்புடன் மதுரையில் கூட்டம் கூடினர்.

600 தொழிலாளிகளைக் கொண்ட கன்னனூர் நூற்புத் தொழிற்சாலை பஞ்சு இன்றி மூடப்படுகிறது.

பருத்திப் பெருக்கத்திற்கும், நூல் வெளிநாடுகளுக்கு மிகுதியாக அனுப்பப்படாமல் இந்நாட்டுத் தொழிலாளர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதற்கும், ஆட்சியாளர், தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதோடு, இரும்புப் பெட்டிகளில் உறங்குகின்ற பொன் அணிகளும், அறநிலையங்களில் கிடக்கும் மிச்சப் பட்ட அளவிலாச் செல்வமும் பொருள் செயலுக்குப் பயன்படுத்தப் பட்டுக், கறுப்பு நீக்கப்படவேண்டும். உறங்கும் பொருள், செயலுக்கு வருவதனால் மேலும் வளரத்தானே போகிறது?

பெருஞ்செல்வரும், பொதுநிலையக் கண்காணிப்பாளரும் இதனைக் கருத்திற் கொள்வார்களா?

* *

பல்லாயிரவரும், பல நூற்றுயிரவரும் கூட்டங்கூடிப் பழகும் நாகரிக காலம் இது என்பது உண்மையே. இதோடு, இங்குப் பொத்தானை அழுத்தினல் தொலைவில் செயல் நிகழ்வது போல, சோழ நாட்டில் கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து இறக்க எண்ணியதைப் பாண்டி நாட்டில் பிசிராந்தையார், யாரும் உணர்த்தாமலே உணர்ந்து நண்பனை அடைந்து அவனுடன் உயிர்நீத்த நட்புணர்வென்னும் இந்நாட்டுப் பழைய உயர் நாகரிகத்தையும் இக்காலம் நழுவவிடாமல் காத்துக்கொள்வது இன்றியமையாதது.


நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

# -அவள் வாழ்க்கை-

[ அ. தி. வீரராகவன் ]

(முன் தொடர்ச்சி)

அன்று ஒரு நாள்! தெருவில் கட்டி வைத்திருந்த கோரைச் சுமையை அவிழ்த்தான் மாறன். அதிலிருந்து ஒரு கருநாகம் சீறிவந்து கையைத் தீண்டி விட்டது. வேலன் பக்கத்தில் இருந்த கழியைத் தூக்கி நாகத்தை அடித்துக் கொன்றுவிட்டான். ஆனால் மாறன்......?

தொண்ணூறு வயதான அத் தொண்டு கிழவனுக்கு உடல் முழுதும் நஞ்சு வேகமாகப் பரவிவிட்டது. அவ்வூர் மருத்துவரும் அழைக்கப்பட்டார். அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. நஞ்சு தலைக்கு ஏறிவிட்டது. சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. வேலன் கண்ணீர் பெருக்கியபடி செய்வது அறியாது அருகில் நின்றிருந்தான். பானு, அப்பா! அப்பா! என்று அலறினள். வேலன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

தன் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த செல்வியைப் பிரியும் துயரம் வேறு அவன் இறுதித் துன்பத்தை மிகுதியாக்கிவிட்டது அவள் தலையை மெல்ல வருடினன். வேண்டாம் என்று திணறித் திணறிக் கூறினன். வேலன் அருகில் அழைத்து அவன் கையோடு பானுவின் கையை இணைத்தான். அவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று அன்போடு நடத்தும்படி கேட்டுக்கொண்டான். வேலன் உறுதி கூறி, பானுவையும் தேற்றினன். கிழவனின் ஆவி நிம்மதியுடன் பிரிந்தது.

சில மாதங்கள் துயரத்தில் கழிந்தன. இயல்பிலேயே அன்பினல் பிணைக்கப்பட்ட வேலனும் பானுவும், ஒரு நல்ல நாளில் அவ்வூர் மக்கள் வாழ்த்துக்களுக்கிடையில் கணவன் மனைவியர் ஆயினர். அவர்கள் வாழ்க்கையில் இன்பத் தென்றல் தவழ்ந்தோடியது. மகிழ்ச்சி மணம் வீசியது.

ஓர் உறுப்பு குறைவுபட்டதன் காரணமாக அவர்களுக்குள் உள்ள அன்பு குறையவில்லை. இருவரும் 'காதல்' வெள்ளத்தில் திளைத்து விளையாடிப் பொழுது போக்கினர். இரண்டாண்டுகள் கழிந்தன.. பானுவுக்கு மகன் ஒருவன் பிறந்தான். 'சந்திரன்' என்று அழைத்து இன்புற்றனர் இருவரும்.

'வாழ்க்கை' என்றைக்கும் சந்தனக் காடாகவோ சம்பங்கித் தோட்டமாகவோ இருந்துவிட முடியாது. பானுவின் வாழ்க்கையில் இதுவரை வீசிய தென்றல் வேறு வகையான காற்றாக மாறும் வண்ணம் நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது.

'சுகாதார அதிகாரி' ஒருவர் அக் கிராமத்திற்கு அன்று பார்வையிட வந்தார். ஊருக்குப் புறம்பாகத் தனிமையில் இருந்த மாறன் வீட்டுக்கு எதிராகத் தெருவில் சென்றுகொண்டிருந்த அவ்வதிகாரி வீட்டின் பக்கமாகத் தம் பார்வையைச் செலுத்தினர். தெருவில் தழைத்து ஓங்கி நிற்கும் புங்க மரத்தின் அடியில் வேலன் உட்கார்ந்து கோரைகளை அளவாக வெட்டிக்கொண்டிருந்தான். பானு அருகில் அமர்ந்து பாய் முடைந்து கொண்டிருந்தாள். பக்கத்தில் சந்திரன் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தான்.

வேலனும் பார்த்தான்; அவ்வதிகாரியும் பார்த்தார். இருவரும் பெருவியப்புக்குள்ளாயினர். அந்த அதிகாரி வேலனின் பள்ளித் தோழர். இராமநாதன் என்பது அவர் பெயர். வேலனைக் கண்டு மகிழ்ச்சி வயமான இராமநாதன், திண்ணையில் வந்து அமர்ந்தார். பானு உட்சென்று கொணர்ந்து தந்த தண்ணீர் பருகியபின், இராமநாதன், வேலனின் நிலைமை கண்டு மகிழ்ந்தார். ஆனல் அவன் இருத்தற்குரிய நிலைமை நினைந்து வருந்தினர். இருவரும் நெடு நேரம் அளவளாவினர். பேச்சோடு பேச்சாக, இராமநாதன், வேலனின் பெற்றோர், மகனைக் காணமல் தேடி அலைந்து சோர்ந்துபோய்த் துன்பத்துடன் காலம் கழிக்கும் நிலைமையைக் கூறினர். வேலனின் அன்னை வேதவதி இறுதிப் படுக்கையில் இருக்கிறுள் என்றும் சொல்லிவிட்டார்.

இராமநாதன் புறப்பட்டுச் சென்றார். வேலன் உள்ளத்தில் அவர் இட்ட சிறிய 'சிந்தனைத் தீ' சிறிது சிறிதாக ஓங்கி எரியத் தொடங்கியது. பெற்றோரைப் பற்றிய நினைவும் பாசமும் அவனைச் சூழ்ந்து கொண்டன. தன் தாயைக் காணவேண்டுமென்று உள்ளம் துடித்தது.

பானுவிடம் உள்ளத்தை வெளியிட்டான். துணைவன் நிலையை உணர்ந்த அவள் திகைத்தாள்; கலங்கினள். தன் பண்புமிக்க அறிவைக் கொண்டு சிந்தித்துத் தேறுதல் அடைந்தாள். சென்று வாருங்கள் அத்தான்! காலம் தாழ்த்தாமல் உடனே திரும்பி வாருங்கள்! என்று நாத் தழுதழுக்கக் கூறினள். "உன்னையும், சந்திரனையும் பிரிந்து வாழும் அவ்வளவு துணிவு எனக்கேது! உடனே திரும்புவேன்" என்று கூறிச் சென்றுவிட்டான்.


## கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

## —N. K. M.—

## தங்க நாடா

( பதிவு )

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

அவன் சென்று நாட்கள் மாதங்கள் ஆயின. மாதங்கள் ஆண்டுகள் ஆயின. சந்திரனுக்குத் தற்போது வயது நான்கு. துள்ளித் துள்ளி விளையாடுகிறான். தன் அம்மாவுக்கு ஆட்டம்பல காட்டுகிறான். அவைகளைப் பார்க்கக் கடவுள் தனக்குக் கண்கள் கொடுக்கவில்லையே என்று கலங்குவாள் பானு. அவன் பிறந்த நேரம் தன் துணைவனைப் பிரிந்து வாழ நேர்ந்ததே என்று கண்ணீர் பெருக்குவாள்.

பழகிய, ஊர் மக்கள் உதவியால் பழைமைபோல் கோரை முடைந்தே காலங் கழித்துவந்தாள். நாட்டில் தாண்டவமாடும் வறுமை அவளையும் வளைத்துக்கொண்டது. மழை இன்மையால் கோரையும் தகுதியாகக் கிடைக்கவில்லை. இருந்த பசுமாடுகளும் அம்மை நோயால் இறந்து விட்டன. இத்தகைய சூழ்நிலையில் தன் மகனுடன், பானு துயரத்தில் மூழ்கித் துரும்பாக இளைத்து விட்டாள். செங்கற்பட்டுக்கு அருகில், கோரை நன்றாக வளர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டாள். தன் வீட்டைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டுத் தன் மகனுடன் செங்கற்பட்டு நோக்கிப் புறப்பட்டாள். வழியில், ஒரு கிராமத்தின் தெரு வழியாகச் செல்லும் போதுதான் நாம் முதலில் பானுவைச் சிறுவனுடன் சந்தித்தது என்பது இதனைப் படிப்பவர்கள் உணர்வார்கள்.

(தொடரும்.)

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

**AVANASHI ROAD,**

**COIMBATORE.**

**'முல்லைக் கொடி'க்கு**

**எல்லா இடங்களிலும்**

**விற்பனையாளர் தேவை.**

# கந்தர் கழலெழுபது

[ திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. ]

கழலின் வெற்றி நடம்.

22. சூர்த்திறத்தை வாட்டிச் சுரர்துயரைத் தீர்த்திட்டுப்
போர்த்தலத்தி லேயவுணர் பொற்பழித்துக்—கீர்த்தி
நடங்கள் துடிகுடை நாமத்த கொண்ட
கடம்புகமழ் கந்தர் கழல்.

23. வாரிதியின் மாட்டே வருவஞ்சச் சூர்மாவைப்
போரிழந்து மாளப் பொருதிட்டு—நீரிடையே
துந்துதுந் தென்று துடிக்கூத்தை[1] யாடிற்றே
கந்தங்கொள் கந்தர் கழல்.

24. வந்த அவுணரெலாம் வாய்கெட்டு வென்னிட்டங்
குந்து படையிழந்தே ஓய்ந்தழியத்—தந்தந்தந்
தாட்டெனவே தன்குடையைச் சாய்த்துக் [2]குடைக்
காட்டியதே கந்தர் கழல். [கூத்தைக்

1. "துடியாடல் வேல்முருக னாடல்"-"சூர்த்திறங் கடந்தோன் ஆடிய துடியும்"
2. "அறுமுகத்தோன் ஆடல் குடை"—"படைவீழ்த் தவுணர் பையுள் எய்தக் குடைவீழ்த் தவர்முன் ஆடிய குடையும்"—சிலப்பதிகாரம்.

# உயர்வு நாட்டுவோம்!

[ சி. து. க. ]

நில்லாத வுலகத்தின் புன்மை யெண்ணி
நெஞ்சமெலாந் தடுமாறி நேய மாந்தர்
எல்லாரும் இரக்கிடவிங் கெமைத் தணந்த
இணையில்லா வல்லபாய் எந்த லென்னும்
வல்லாளன், இந்தியப்பே ரரசு கண்ட
மதியமைச்சன், வாழ்வெல்லாம் நாட்டு மக்கள்
எல்லாரும் உயர்வெய்த இழைத்த வண்ணம்
எவர்தாம்இங் கினியியற்ற இருக்கின் றாரே.

ஆண்டுபல உழைத்தெய்தும் ஆட்சித் தேரின்
அரியதாம் அச்சாணி ஆகி நின்றும்,
ஈண்டுபல சிற்றரசு மறைந்தொ துங்க
இந்தியப்பே ரரசுலகில் எற்ற மெய்த
வேண்டுநிலை மிகுவித்தும், வெற்றி நேரு
வீரனுயிர்க் குயிராக விரும்பி யாட்சி
மாண்டமணி வல்லபாய் மறைந்த தேயோ!
மண்பொதியும் இருளெங்ஙன் மாயுங் கொல்லோ!

பொற்கோட்டு நல்லிமயம் சாய்ந்த தேனும்
புட்விநிலை தடுமாறிப் புரண்ட தேனும்
சற்றேனும் துளங்காது தழையு மாண்மைச்
சர்தாராம் வல்லபாய் தணந்த பின்னர்,
உற்றேது செய்வதென வுணர்வு மாழ்கி
ஒழியாமே நாமெல்லா மொன்று கூடிக்
கற்றேயிங் கவர்வழியைக் கடைப்பி டித்துக்
காட்டுவோம் உயர்வதனை நாட்டு வோமே.

## "முல்லைக் கொடி."

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில்,

எல்லார்க்கும் புரியும் வகையில்,

எளிய விலையில்,

வாழ்வின் பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சிறந்த ஆக்கப் பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

குறிப்பு :—

1. கார்த்திகை விழா முதல் (24-11-50) 'முல்லைக் கொடி' புதுஒளி பெற்று வெளிவருகின்றது. ஆண்டுக் கையொப்பமாகச் சேர்வோர், ஒரு மாதத்துக்குள் (பொங்கல் நாளுக்குள்) விரைவிற் சேர்தல் வேண்டும். அவர்க்கு இதழ்கள் குறைவின்றிக் கிடைக்கும்.

கிழமை இதழாயிருந்தும் இதற்குக் கட்டணம் குறைவு. ஆதலால், காலந்தாழ்த்து சேர்வோர், சேரும் காலி லிருந்து வெளிவரும் இனி இதழ்கள் மட்டுமே முழுக்கையொப்பத்துக்கும் கிடைக்கப் பெறுவர்.

2. குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ. $1\frac{1}{2}$ மட்டும்.

3. 'முல்லைக் கொடிக்' கையொப்பங்கள் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசிக் கலைமகள் விழாவுடன் நிறைவேறும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 JAN 951
MADRAS

# குருகுலம், மாம்பாக்கம்;

( வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி )

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

## செய்கை நிலையம்.

நாட்டு மக்கள். 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்'

'பணி' என்னும் ஐவகை வாழ்வியல்

திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு

முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம்;

நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம்;

தொழிலகம், அருள் நிலையம் முதலிய

பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

**வாழி, மன்பதை!**

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : கி. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.).